DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.116/2023**
Prosecution witness- **PW.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : Salman | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 11:20 A.M. to 11:40 A.M. | | |

**(Accused A1, A2 present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.11.2023

16.11.2023 முதல் விசாரணை

நான் தற்போது ஊட்டியில் குடியிருந்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

1) 07.02.2023ம் தேதி குன்னூர் கரடிபள்ளத்திலுள்ள பாலசுப்ரமணியம் என்பவரது பங்களாவில் வெல்டிங் மற்றும் மேற்கூரை வேலைக்காக எதிரிகள் என்னை அழைத்துச் சென்றார்கள். எனக்கு உதவிக்காக பாலாஜி என்பவரை கொடுத்திருந்தார்கள். 12.02.2023ம் தேதி மாலை 04.30 மணிக்கு நான் வேலை செய்து கொண்டிருந்தபோது எதிரிகள் எனக்கு சரிவர பாதுகாப்பு உபகரணங்கள் கொடுக்காததால் ரீப்பரை நான் மெஷினில் கட் செய்தபோது அதிலிருந்த ஆணி மீது மிஷின் பட்டு ஜம்ப் ஆகி எனது இடதுகை மணிக்கட்டு கட்டாகி ரத்தக்காயம் ஏற்பட்டது. அப்போது என்னுடன் எனது உதவியாளர் பாலாஜியும் இருந்தார்.

2) எனது உதவியாளர் என்னை குன்னூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தார். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றார்கள். அங்கு வந்து 1ம் எதிரி விபத்து தொடர்பாக போலிசில் புகார் எதுவும் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதனால் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. பின்னிட்டு மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி எனது

வீட்டிற்கு வந்தபோது எதிரிகள் கூறியதுபோல் பணம் எதுவும் கொடுக்காததாலும் எந்த ஒரு உதவியும் செய்யாததாலும் சாப்பிட்டிற்கே மிகவும் கஷ்டமாக இருந்ததாலும் எதிரிகளிடம் சென்று கேட்டபோது பணம் கொடுக்க முடியாதென்றும் வண்டி ஏற்றி கொன்றுவிடுவேன் என்றும் கொலைமிரட்டல் விடுத்தார்கள். எனவே 16.03.2023ம் தேதி குன்னூர் நகர காவல்நிலையம் வந்து நான் புகார் கொடுத்தேன். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னிடம் காட்டப்படும் கட்டிங் மெஷின் தான் அன்றையதினம் நான் வேலை செய்யும் போது விபத்து ஏற்படுத்தியது ஆகும். (**அந்த கட்டிங் மெஷின் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u> - (**1ம் எதிரி தரப்பில் எதிரி தாமாகவே குறுக்கு விசாரணை மேற்கொண்டார்**)

1) எனது சொந்த ஊர் மேற்கு வங்க மாநிலம் கல்கத்தா ஆகும். எனக்கு ஆதார் அட்டை உள்ளது. எனது மனைவி பெயர் ஈஷா ஆகும். எனக்கும் எனது மனைவிக்கும் நடந்த திருமணம் முறைப்படியான திருமணம் ஆகும். விபத்திற்கு முன்பாக 07.02.2023ம் தேதி முதல் எதிரிகளிடம் நான் வேலை பார்த்து வருகிறேன். விபத்திற்கு பிறகு நான் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது 1ம் எதிரி என்னை பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) விபத்து ஏற்படுத்திய மெஷினை எப்போது போலிசாரிடம் கொடுத்தேன் என்றால் புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை மெஷினை தாக்கல் செய்ய சொன்னதால் பின்னிட்டு கொடுத்தேன். மேற்கண்ட அ.சா.பொ.1ஐ நான் ஊட்டியிலுள்ள ஒரு கடையில் வாங்கினேன். எதிரிகள் வேலைக்காக வரும்போது அந்த மெஷினையும் கொண்டு வரச்சொன்னதால் கொண்டு வந்தேன். தினசரி சம்பளம் பேசி எதிரிகள் என்னை வேலைக்கு வைத்தார்கள்.

3) நாள் ஒன்றுக்கு ரூ.1,200/- சம்பளம் பேசியிருந்தார்கள். 07.02.2023ம் தேதியிலிருந்து மேற்படி இடத்தில் நான் வேலையை தொடங்கினேன். 07.02.2023லிருந்து விபத்து ஏற்பட்ட 12.02.2023ம் தேதி வரை நான் சம்பளத்தை

பெற்றுக் கொண்டேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திலிருந்து எனது வீடு சுமார் 100லிருந்து 200 மீட்டர் தூரத்தில் உள்ளது. என்னை போனில் அழைத்து யார் மிரட்டினார்கள் என்றால் 2ம் எதிரி ஸ்ரீகாந்த் தான் போனில் அழைத்து மிரட்டினார். 1ம் எதிரி மருத்துவமனைக்கு வந்து எனக்கு தேவையான உதவிகளை செய்வதாக கூறினார்.

4) எனது செல்போனுக்கு 2ம் எதிரி போன் செய்து மிரட்டினார். எனது செல்போன் எண்.6369035031 ஆகும். 2ம் எதிரியின் செல்போன் எண் தற்போது ஞாபகமில்லை.

**(இத்துடன் 1ம் எதிரியின் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - **(வாய்ப்பளித்தும் இல்லை)**

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.